1972 மார்ச் 24]

*686 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருவாரூர் புகைவண்டி நிலையம் அருகில் உள்ள லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டுவதற்கு திருவாரூர் நகராட்சியிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா :—தலைவரவர்களே, தமிழகத்தின் பல பகுதிகளில் பாலங்கள், மேம்பாலங்கள் அமைவதற்கு மூலகாரணமாக இருக்கும் திருவாரூரில் ஒரு மேம்பாலம் கட்ட அரசு ஆலோசிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற ஒரு கோரிக்கை நகராட்சி மன்றத்திலிருந்து வரவில்லை. கோரிக்கை வந்த பிறகு அது பற்றி பரிசீலிக்கலாம்.

ஏலகிரி மலையில் சின்கோனா பயிரிடுதல்

*687 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் "சின்கோனா" மற்றும் "ஜெரேனியம்" பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.

அரசுப் பேருந்துகளுக்கான உதிரி உறுப்புகள்.

*688 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசுப் பேருந்து போக்குவரத்துத் துறைக்கு உதிரி உறுப்புக்கள் கிடைக்காத காரணத்தால் பழுதடைந்த பஸ்களைப் பழுது பார்க்கப் படுவது தடைபட்டுள்ளது என்று கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இப்போது தமிழக அரசு பேருந்துகளுக்கான உதிரி பாகங்கள் எந்தெந்த கம்பெனிகளிடமிருந்து வாங்கப்படுகின்றது என்பதையும், அவைகளை வாங்குவதிலே காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதையும், அதைத் தவிர்க்க அரசு மேற்கொண்டு இருக்கும் நடவடிக்கைகளையும் அறிவிக்கக் கோருகிறேன்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த அரசுப் போக்குவரத்துத் துறையிலே உள்ள பஸ்களுக்கு 'அசோக் லேலண்டு லிமிடெட், மெசர்ஸ் டாடா இஞ்ஜினீரிங் அண்டு லோகோ மோடிவ் கம்பெனி, மெசர்ஸ் பை—மெடல் பேரிங்ஸ் லிமிடெட்